[1987 மார்ச் 28

கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரிக்கு பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கல்.

224—(* வினா எண் 11254) **திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரிக்கு பல்கலைக் கழக அந்தஸ்து வழங்க தமிழக அரசு முடிவு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே,

(அ) பல்கலைக் கழக மானியக் குழு மற்றும் தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளது.

(ஆ) கோவையிலுள்ள அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் கல்லூரியை 'கருதப்படும் பல்கலைக் கழகமாக' உயர்த்த கருத்துரு அக்கல்வி நிறுவனத்தாரால் மைய அரசிற்கும் பல்கலைக் கழக மானியக் குழுவிற்கும் அனுப்பப்பட்டுள்ளது. பல்கலைக் கழக மானியக்குழு மாநில அரசின் கருத்தினை கோரியது. இக்கருத்துருவினைப் பரிசீலித்து அரசு தக்க நடவடிக்கையெடுக்க இருக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, கோவைக்கு மட்டுமல்லாமல் தமிழகத்திற்கே பெருமை சேர்க்கக்கூடிய இந்த அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் கல்லூரியை பல்கலைக்கழக அந்தஸ்து பெறத்தக்க அளவிற்கு செய்வதற்கு கருத்துரு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தப் பரிசீலனை எப்போது நிறைவு பெறும்? நிறைவுபெற்று பல்கலைக் கழக அந்தஸ்திற்கு உயர்த்துவதற்கு அரசு எப்போது நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, 'டீம்ட் யூனிவர்சிட்டி' என்ற தகுதியைப் பெறுவதற்கு சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவேண்டியிருக்கிறது. அது குறித்து யூ.ஜி.சி.. மற்றும் மாநில அரசு அந்த நிறுவனத்திற்கு

அறிக்கைகளை அனுப்பி இருக்கின்றன. அவர்கள் சிலவற்றிற்கு பதில் தந்திருக்கிறார்கள். சில கோரிக்கைகளும் கேட்கப்பட்டிருக்கின்றன. அதெல்லாம் வந்த பிறகு விரைவில் அதுகுறித்து நடவடிக்கையெடுக்கப்படும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அவினாசிலிங்கம் மகளிர் மனையியல் கல்லூரியை பல்கலைக்கழக அந்தஸ்திற்கு உயர்த்துவது அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறது என்று சொல்லப்பட்டது. அந்தக் கல்லூரி, சத்துணவுத் திட்டம் போன்ற காரியங்களில் பெரிய ரிசர்ச் நடத்தி பல இன்வென்ஷன்களைக் கொண்டு வந்திருக்கிறது என்பது உண்மை. ஆனால் பல சந்தர்ப்பங்களில் பி.காம்., போன்ற வகுப்புகளையெல்லாம் மூடி பலவிதமான தொல்லைகள் ஏற்பட்டதை இதே அவையிலே ஞாபகத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அப்படிப்பட்ட நிலைமையில் ஒரு பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கும்போது மேற்கண்ட தன்மைகள் அந்த நிறுவனத்தில் இல்லாமல் இருப்பதற்கு என்ன பந்தோபஸ்தை அரசாங்கம் உண்டாக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு Deemed University என்ற முறையிலே அதைப் பல்கலைக்கழகமாக நாம் உயர்த்துகின்ற போது, குறிப்பாக புதிய கல்விக் கொள்கையையொட்டி, Life-oriented, utility-oriented Education தரமுள்ள கல்வி என்ற முறையில், பயனுள்ள வகையில், ஈர்க்கக்கூடிய வகையில் இருக்கின்ற கோர்ஸ்களை அவர்கள் கொண்டுவர வேண்டும் என்று அரசு பிரத்யேகமாகக் கருதுகிறது. சில நேரங்களில் சில பட்டப் படிப்புகள் ஈர்க்கக்கூடிய வகையில் இல்லை என்றால், அவைகளை மூடுவதற்குக் கூட அதிகாரம் அந்தக் கல்லூரிகளுக்கு இருக்கிறது, அரசின் அனுமதியைப் பெற்று. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய பிரச்சினையைப் பற்றிய தகவல் அரசிடம் இல்லை. இருந்தாலும் இதுகுறித்தும் அரசு ஆயும்.